**கவனிக்க.**- *20.12.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1843 - 2013 දෙසැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2013.12.27

*1843 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | *1730* | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1731* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | *1735* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) *தயா சரண அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2013, திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2014, சனவரி மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, சனவரி மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கை புகையிரத சேவைகள்

புதியதொரு CNC SURFACE WHEEL கடைசல் இயந்திரமொன்றை இரத்மலானை புகையிரத வேலைத்தளத்திற்கு வழங்கல், இணைத்தல் மற்றும் செயற்படுத்தல்

பெறுகை இலக்கம் : SRS/F. 7104

இரத்மலானை புகையிரத வேலைத்தளத்திற்கு புதியதொரு CNC SURFACE WHEEL கடைசல் இயந்திரமொன்றை வழங்கல், இணைத்தல் மற்றும் செயற்படுத்தல் ஆகியவற்றிற்காக உற்பத்தியாளர்கள்/வழங்குநர்கள் ஆகியவர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை, கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சின் அமைச்சு பெறுகைக் குழுவின் தவிசாளர் பெற்றுக்கொள்வார். உற்பத்தியாளர்கள் அவர்களால் அற்றோணித் தத்துவம் வழங்கப்பட்ட தராதர அங்கீகாரமுள்ள முகவரொருவரினூடாகவும் அவர்களின் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.

2. விலைமனுக்கள் 2014.01.16 ஆந் திகதி இலங்கை நேரம் பி. ப. 2 மணிக்கு மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமான பத்தாயிரம் ரூபாவை (10,000 ரூபா) இலங்கைப் பணத்தில் செலுத்திய பின்னர் 2013.11.25 ஆந் திகதியிலிருந்து 2014.01.15 ஆந் திகதி வரை மு. ப. 9 மணிக்கும் பி. ப. 3 மணிக்குமிடையில் (இலங்கை நேரம்) சாதாரண வேலை நாட்களில் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து விலைமனு ஆவணத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வெளிநாட்டு விலைமனுதாரர்கள் மேலே திட்டவட்டமாகக் குறிப்பிட்டுள்ள நாட்களில், இலங்கைப் பணம் பத்தாயிரம் ரூபாவிற்கு (10,000 ரூபா) சமமான தொகையை இலகுவில் மாற்றக்கூடிய வெளிநாட்டுப் பணத்தில் அவர்களது நாடுகளிலுள்ள இலங்கை தூதுவராலயத்தில் செலுத்திய பின்னர் விலைமனு ஆவணங்களை வழங்கும்படி, இலங்கையிலுள்ள தூதுவராலயம் மூலமாக, இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலை அத்தியட்சகருக்கு கோரிக்கையொன்றைச் சமர்ப்பிக்கலாம். மேலே குறிப்பிட்டுள்ள பெறுகைக் கட்டணமான இலங்கைப் பணம் பத்தாயிரம் ரூபா (10,000 ரூபா) (அல்லது வெளிநாட்டு பணத்தில் இலகுவாக மாற்றக்கூடிய சமமான தொகை) மீளளிக்கப்படாததாகும்.

4. விலைமனுக்கள், இலங்கை, கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சில் விலைமனுக்களை முடியவுடன் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அத்தாட்சிபெற்ற பிரதிநிதிகளை சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம். அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படலாம்.

தவிசாளர்,
அமைச்சு பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியச்சாலை அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வருபவருடன் தொடர்புகொள்ளவும் :-

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்.
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி இல. : 94(11) 2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11)2432044.
மின்-அஞ்சல் : srs.railway.gov.lk
gmrslr@sltnet.lk
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
அமைச்சு பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு.

பெறுகை இலக்கம் : SRS/F.7104

12-983

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

ஐக்கிய இராச்சியத்தில் எல்ஈ 15 7 எப்டி ரட்லன்ட் பாலி ஒப் மோர்னல் லேன், க்லொக் ஹவுஸ் கோர்ட், இல. 3 தற்போது ராஜகிரிய, மாரகஸ்முல்ல றோட், இல. 10 இல் குடியிருக்கும் ஹேமா உக்வத்த லியனகே ஆகிய நான் ராஜகிரிய, மாரகஸ்முல்ல றோட், இல. 10 இல் குடியிருக்கும் தயானந்த ரத்னாயக்க என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு என். அபேரத்ன அவர்களால் 2006.07.18 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட இல. 1476 என்ற அற்றோணி தத்துவப்பத்திரத்தை இங்கு குறிப்பிடும் திகதியிலிருந்து இரத்துச்செய்து அது செயலிழக்கப்பட்டிருப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவித்தல் தருகிறேன்.

ஹேமா உக்வத்த லியனகே.

12-1109

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

பாணந்துறை, ஹொரண வீதி, வேகட இலக்கம் 210/12 இல் வசிக்கும் வித்தானகே தொன் டில்ஹான் மலிந்த சிரிகுமார ஆகிய என்னால் 2012.08.13 ஆந் திகதி அவுஸ்திரேலியா, கன்பெராவின் ஆணையாளர் முன்னிலையில் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட அற்றோணி அதிகாரத்தின் மூலம் பாணந்துறை, த சொய்சா வீதி, இல. 35/1 இல் வசிக்கும் விஜேசூரிய குணவர்தன மஹவடுகே ஜயசேன பெரேரா என்பவரை எனது அற்றோணி அதிகாரியாக நியமித்ததை இன்று முதல் இரத்துச் செய்வதாகவும் இதன்கீழ் செய்யப்படும் எவ்வித செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு இத்துடன் அறியத்தருகிறேன்.

டபிள்யூ. டி. டில்ஹான் மலிந்த சிரிகுமார.

12-1098

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : நிஷியா கோப்பரேஷன் லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீபி 5147
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.10.30
*பதிவு முகவரி* : இல. 10டி, த லேண்ட் மார்க், இல. 385, காலி வீதி, கொழும்பு 3

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

12-1115/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஹேறன் டெல் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 95176
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.10.24
*பதிவு முகவரி* : இல. 141/3, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

12-1115/2

---

## கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஹெரோச் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 95724
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2013, நவெம்பர் 25
*பதிவு முகவரி* : இல. 267, கடுவெல வீதி, பத்தரமுல்ல

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

12-1115/3

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*கம்பனியின் பெயர்* : எவரோ இம்போட்ஸ் அன்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 94738
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.09.27
*பதிவு முகவரி* : ஆகு ரெஸ்ச வீதி, ஹித்தேட்டிய, மாத்தறை

கம்பனி செயலாளர்கள்.

12-1087

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் நிறுவனங்கள் பதியப்பட்டுள்ளது :-

*பெயர்* : டிரிபர் டிரிப்ஸ் அன்ட் ஹொலிடேஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 93781
*முகவரி* : இல. 24/38ஏ, 2 ஆவது ஒழுங்கை, கடவத்தை வீதி, களுபோவிலை, தெஹிவளை
*திகதி* : 2013, யூலை 30

*பெயர்* : விஷ் ஒன் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 95035
*முகவரி* : இல. 26ஏ, சிரிமல் மாவத்தை, தெஹிவளை
*திகதி* : 2013, ஒற்றோபர் 14

*பெயர்* : எட்பெக்டர்ஸ் பப்ளிக் ரிலேஷன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 95317
*முகவரி* : இல. 28/4, 5 ஆவது ஒழுங்கை, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3
*திகதி* : 2013, நவெம்பர் 04

ஆர். ஜே. கன்சல்டிங்,
கம்பனி செயலாளர்.

12-1015

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : சாலின்த சுப்பர் எம் எச் (பீவீரீ) எல்ரீடீ
*பதிவிலக்கம்* : பீவீ 95463
*கூட்டிணைப்புத் திகதி* : 11.08.2013
*பதிவு முகவரி* : தலுகம கோப் ஒப் மாடி வீதி, கடவத்தை

சபையின் கட்டளைப்படி,

மெனேஜ்மென்ட் அன்ட் பிசினெஸ்
அட்வைசரி சேவிசெஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்-பீவீ 259,
கம்பனி செயலாளர்கள்.

12-1018

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இம்புல்கொட, இஹல இம்புல்கொட, பொல்ஹேனவத்த, இல. 104/3/7 இல் வசிக்கும் தியவலகெதரகே சம்பத் பிரியதர்ஷன ஆகிய நான், பிரசித்திபெற்ற நொத்தாரிசு தமயந்தி குணதிலக அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 1316 மற்றும் 2013.06.20 ஆந் திகதி கொண்ட விசேட அற்றோணி தத்துவத்தால் கல்கிஸ்ஸை, டெம்பல் றோட், இல. 64/2 இல் வசிக்கும் லுவிஸ் அன்டனி விதானலாகே பத்மசிரி ஆகியவரை எனது அற்றோணி தத்துவக்காரராக நியமித்ததுடன், அந்த நியமனத்தை இதன் மூலம் இரத்துச்செய்து செயலிழக்க வைப்பதாகவும் மேற்கூறப்பட்ட லுவிஸ் அன்டனி விதானலாகே பத்மசிரி அவர்களால் எனது அற்றோணி தத்துவக்காரராக என் பெயரில் செய்யும் எந்தச் செயற்பாட்டிற்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இதன் மூலம் அறியத்தருகிறேன்.

தியவலகெதரகே சம்பத் பிரியதர்ஷன.

12-1044

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் 2013, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி கீழ்குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என அறியத் தருகின்றோம் :-

*கம்பனியின் பெயர்* : லீ ஹெஜஸ் இன்வெஸ்ட்மென்ட்ஸ் லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 5149
*பதிவு அலுவலகம்* : இல. 353, காலி வீதி, கொழும்பு 3

எஸ்ஜே கோர்ப்பரேட் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

லெவல் 4,
இல. 2, காசல் ஒழுங்கை,
கொழும்பு 4.

12-1020

---

## அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

லேக் வியு இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. பீவீ 3031

இத்தால் சகலரும் அறிவது யாதெனில், 2013, கார்த்திகை 29 ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக் கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319(1)(பி) இன்கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் தன்னிச்சையான ஒடுக்குதல் மூலம் 2013, கார்த்திகை 29 ஆந் திகதி முதல் கலைப்ப தற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது :-

கே. செல்வநாதன்,
கே. சீ. என். பெர்னாண்டோ,
வீ. நடராஜ்,
பணிப்பாளர்கள்.

2013, மார்கழி 06.

12-989/1

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின்கீழான இணை கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

லேக் வியூ இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இல. பீவீ 3031

கொழும்பு 4, காசல் வீதி, இல. 2, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட் ஆகிய நாம், இல. 83, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13 இல் அமைந்துள்ள லேக் வியூ இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட் கம்பனியின் 2013, கார்த்திகை 29 ஆந் திகதி நடைபெற்ற அதிவிசேட பொதுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, மேற்படி கம்பனியின் இணை கலைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம மற்றும்
ஜீ. ஜே. டேவிட்
இணை கலைப்பாளர்கள்,
லேக் வியூ இன்வெஸ்ட்மென்ட்
(பிறைவேட்) லிமிட்டெட்.

மே./பா., எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ்,
ரிஸ்ரக்ஷர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4,
06.12.2013.

12-989/2

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பு, மூன்றாவது குறண ரத்ன வீதியில் இலக்கம் 12 இல் வசிக்கும் ஜோர்ஜ் பிரயன் ரணசிங்கவுடன் மலிந்தா நியோமி ரணசிங்க ஆகிய நாங்கள், 2011.10.24 ஆந் திகதி கையொப்பமிடப்பட்டு பிரசித்த நீதிவான் ஏ. என். பிரான்ந்து அவர்களினால் உறுதிப்படுத்தப் பட்ட இலக்கம் 767 உடைய அற்றோணி அதிகாரப்பத்திரத்தின் மீது இம்முகவரியில் பதிவுள்ள பேமமாலி பெனடேத் பிரனாந்து என்பவருக்கு எங்களால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என்பதை பொது மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

ஜோர்ஜ் பிரயன் ரணசிங்க
மற்றும்
மலிந்தா நியோமி ரணசிங்க.

12-1100

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் சகலருக்கும் அறிவிக்கப்படுவதாவது,

மேற்கூறப்பட்ட விசேட அற்றோணி தத்துவத்தில் விரித்துரைக்கப் பட்டவாறு 'குரும்பை விளனாய்' எனப்படும் ஆதனத்தை விற்பனை செய்தல், மாற்றுதல் அல்லது கையாளுதல் ஆகிய நோக்கங்களுக்காக யாழ்ப்பாணம், அளவெட்டி, கொலிஜ் வியூவைச் சேர்ந்த செல்வதுரை செல்வநேசன் அற்றோணியுடன் சூசைப்பிள்ளை சந்தானசாமி மற்றும் பெண் சந்திரா சந்தானசாமி ஆகியோர் ஏற்படுத்திக் கொண்டதும் 2009, செத்தெம்பர் 1 ஆந் திகதியிடப்பட்டு இலங்கை, யாழ்ப்பாணம், அளவெட்டி, அளவெட்டி தெற்கு சூசைப்பிள்ளை சந்தானசாமி மற்றும் பெண் சந்திரா சந்தானசாமி ஆகியோரால் நிறைவேற்றப்பட்டதுமான விசேட அற்றோணி தத்துவம் இத்தால் முற்றிலுமாக இரத்துச்செய்யப் பட்டு, நீக்கப்பட்டு, ஒழிக்கப்படுகிறது.

சூசைப்பிள்ளை சந்தானசாமி மற்றும்
பெண் சந்திரா சந்தானசாமி.

12-1127

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : கார்டா பெஷன்ஸ் (பீவீரீ) எல்ரீடீ
*பதிவிலக்கம்* : பீவீ 95562
*கூட்டிணைப்புத் திகதி* : 2013, நவெம்பர் 15
*பதிவு முகவரி* : இல. 18/04, தாள்வத்த, கோணவள, களனி

சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

12-1125

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ், என். ஜே. சீ. இன்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட் 2013, நவெம்பர் 6 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு மாற்றியமைக்கப்பட்டுள்ளதென மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : என். ஜே. சீ. இன்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 60841
*பதிவு முகவரி* : "ஜட்விங் ஹவுஸ்", இல. 46/26, நவம் மாவத்தை, கொழும்பு 02

சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

12-1126

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் 2013, திசெம்பர் 2 ஆந் திகதி டுவர்டி (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறவிக்கின்றோம். இந்த கம்பனி, பீவீ 95842 ஆம் பதிவு இலக்கத்தைக் கொண்டுள்ளதுடன் அதன் பதிவுசெய்யப்பட்ட முகவரி இல. 23, யெஹியா றோட், இஸடீன் நகரம், மாத்தறை.

பணிப்பாளர்.

12-1180

---

## அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இரத்மலானை, சிரிமல் உயன, தம்மதார மாவத்தை, இல. 39/2 மற்றும் தற்போது நியூசிலாந்து, போஸ்ட்கோட் 0602, ஒக்லன்ட், க்லென் ஈடன், பாம் கொட் ட்ரைவ், இல. 16 என்ற விலாசத்தில் குடியிருக்கும் சேர்மன் மஹேசின் விஜேசேகர (தே. அ. அ. இல. 61051024V) ஆகிய நான், இரத்மலானை, சிரிமல் உயன, தம்மதார மாவத்தை, இல. 39/4 இல் குடியிருக்கும் ஆனந்த சரத் தன்தநாராயண (தே. அ. அ. இல. 503130874V) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு சமந்தி பி. குமாரசிங்க அவர்களால் 2010.11.22 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட இல. 1279 என்ற அற்றோணி தத்துவப்பதிவு புத்தகத்தின் 56 ஆம் பக்கம், 41 ஆம் வரிசையில் திகதி குறிப்பு இல. 9352 இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட அற்றோணி தத்துவப்பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் 2013.12.12 ஆந் திகதி தொடக்கம் இரத்துச்செய்கிறேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

மேற்படி ஆனந்த சரத் தன்தநாராயண என்பவர் இன்று தொடக்கம் எனது சார்பாக புரியும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இதன் மூலம் அறிவித்தல் தருகிறேன்.

சேர்மன் மஹேசின் விஜேசேகர.

12-1179

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*கம்பனியின் பெயர்* : நோவா கிரியேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 95111
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.10.21
*முகவரி* : இல. 300, கடுவெல வீதி, மாலபே

கம்பனி செயலாளர்.

12-1201

---

## பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பு தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஏ கிளாஸ் ட்ரேடிங் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : பீவீ 95091 ; திகதி : 25.10.2013
*கம்பனியின் பதிவு முகவரி* : இல. 116 1/4, நீர்கொழும்பு வீதி, வத்தளை (பிறைவேட்) லிமிட்டெட்

பிசினெஸ்மேட் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

இல. 45, பிரேபுறூக் வீதி,
கொழும்பு 02.

12-1209

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் முன்னைய பெயர்* : ராம் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 83750
*திகதி* : 2013.11.06
*பதிவு முகவரி* : இல. 38 1/2, நெல்சன் பிளேஸ், கொழும்பு 06
*கம்பனியின் புதிய பெயர்* : ஸ்டிம்புஹோ லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர்.

12-1208

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : எம். எம். ஜெவ்னா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : பீவீ 95660
*திகதி* : 2013.11.20
*பதிவு முகவரி* : இல. 580 2/2, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

யூ. எஸ். கோர்ப்பரேட் சொலுஷன்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனி செயலாளர்கள்.

12-1207

**வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்**

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 9(1) ஆம் பிரிவுக்கமைய பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ராம் அன்ட் சன்ஸ் எபரல் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனி இலக்கம்* : *பீவீ 95481*

*திகதி* : *11.11.2013*

*பதிவுசெய்யப்பட்ட விலாசம்* : இல. 202, காலி வீதி, பம்பலப்பிட்டிய, கொழும்பு 4

எம். சீ. எம். நவாஸ்,
கம்பனி செயலாளர்.

*12-1181*

---

## ஏல விற்பனைகள்

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – நகர அலுவலக கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***வத்தளை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹெந்தலை கிராமத்தில் அமைந்துள்ள கொஸ்கஹ பாதையில் வரிமதிப்பீட்டு இல. 26ஏ எனும் தல்கஹவத்த எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. டீ. சீ. ஏ. பெரேரா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2601 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 3 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மாடிக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். (அத்துடன் மேற்கூறிய வரைபடத்தில் லொட் 4 இன் ஊடாகவும் மேலாகவும் பாதையை உபயோகிக்கும் உரிமையுடன்)***

**(பரப்பளவு : 15 பேர்ச்சஸ்)**

***ஆதனத்தை வந்தடைதல்.***- ஹிந்தகல சந்தியிலிருந்து ஹெந்தல பாதையில் மருதானைப் பாதை வரை சென்று மேலும் சற்று தூரம் சென்று நிர்மல மாரியா மாவத்தைக்குத் திரும்பி சுமார் 150 மீற்றர் தூரம் சென்றதும் சந்திக்கும் 10 அடி அகலமான பாதையின் வலதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது. (வரிமதிப்பீட்டு இல. 26ஏ)

*இவ்வாதனம் கஹந்தவிட கமகே தொன் எலோய் பிரியந்த குணவர்தன என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.*

இவ்வாதனம் 2014.01.16 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.***- *2008.06.27 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008.06.02 ஆந் திகதிய ''திவயின'', ''த ஐலண்ட்'' மற்றும் 2008.06.05 ஆந் திகதிய ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனை யாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90 வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

***உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.***- பதில் பொது முகாமை யாளர், (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661815, 011-2661835, 011-2661836.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8446374, 077-7761706.

*12-1136*

---

**கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ – கேகாலை கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**மிகவும் பெறுமதிமிக்க வியாபாரத்திற்கு பொருத்தமான காணி ஏல விற்பனை**

**கேகாலை நகரசபை எல்லைக்குட்பட்ட தொகுதி இலக்கம் 3, பலகம கிராமத்தில் கொழும்பு-கண்டி பாதையின் எல்லையில் அமைந்துள்ள கிரிவனே ஹேன தற்போது வத்த எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஆர். கே. நிஸ்ஸங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.08.08 ஆந் திகதிய 2011/73 ஆம் இலக்க**

**வரைபடத்தின் பிரகாரம் பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும்.**

**(பரப்பளவு : 20 பேர்ச்சஸ்)**

***ஆதனத்தை வந்தடைதல்.*** - *கொழும்பு-கண்டி பிரதான பாதையில் சுமார் 78 கி. மீ. கம்பம் அருகில் சம்பத் வங்கிக்கு முன்னால் உள்ள பாதையின் இடதுபக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*இவ்வாதனம் கேகாலை பிரதான வீதியில் ரோயல் ஷொப்பிங் கொம்ப்ளெக்ஸ் இல. 142 எனும் இடத்தில் தனது பதிவு அலுவலகத்தை நடாத்திச் செல்லும் மொனரா ஜபான் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.*

*இவ்வாதனம் 2014, சனவரி 13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.*** - *2013.11.15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2013.10.31 ஆந் திகதிய "த ஜலண்ட்", "லக்பிம" மற்றும் "தினக்குரல்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு முறை.*** - *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனை யாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.*

*கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து), பிரதேச சபை வரியும் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் மற்றும் வரிகளும், ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2% (நூற்றுக்கு இரண்டரை), நொத்தாரிசு கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90 வீதம் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் பீஎல்சீ அலுவலகத்தில் செலுத்தப்படுதல் வேண்டும். மிகுதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்தப் பட்டுள்ள பணத்தொகையில் 10% இழக்கவேண்டி ஏற்படுவதுடன் இவ்வாதனத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.*

***உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.*** - *முகாமையாளர் (இடம்), கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 186, பிரதான வீதி, கேகாலை உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 035-5678000, 2222034, 2230232 ; தொலை/பெக்ஸ் இல. : 035-2230231.*

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 071-4755974, 071-8446374, 077-7761706.
தொலை/பெக்ஸ் இல. : 081-2210595.

12-1135

**ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – ராகம கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து ஏல விற்பனை**

**பியகம நகரசபை எல்லைக்குட்பட்ட கல்ஏதன்ட மற்றும் கோனவல கிராமத்தில் அமைந்துள்ள பத்தலவத்த எஸ்டேட் எனும் காணி உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. சீ. எம். எஸ். விமலரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1977.10.16 ஆந் திகதிய 231/1997 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் ஏ எனும் காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும்.**

**உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டீ. ஜே. நானாயக்கார என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1964.05.19 ஆந் திகதிய 990 ஆம் இலக்க வரைபடத்தில் பாதைக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியில் செல்லும் பிரவேச உரிமையுடன்.**

**(பரப்பளவு : 15 பேர்ச்சஸ்)**

***ஆதனத்தை வந்தடைதல்.*** - *கிரிபத்கொட நகர மத்தியிலிருந்து ஆர். எஸ். பெரேரா மாவத்தையூடாக சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் சந்திக்கும் முச்சந்தியில் இடதுபக்கமாகத் திரும்பி கொஹொல்லவில பாதைக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 1.20 கி. மீ. தூரம் எட்டஹெரலியகஹ சந்தியைக் கடந்து இடதுபக்கமாகவுள்ள பத்தலவத்த பாதை வரை வந்து இடதுபக்கமாகத் திரும்பி மேலும் சுமார் 300 மீற்றர் தூரம் சென்றால் ஒரு முச்சந்தியை அடையலாம். இங்கிருந்து இடதுபக்கமாகத் திரும்பி அம்மணற் பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் எல்லையில் இடது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.*

*இவ்வாதனம் வை. கே. புட்ஸ் மார்க்கட்டிங் (பிறைவேட்) லிமிட்டெட் கடப்பாடுடையதாகவும் செனவிரத்ன பிரியந்த நோர்ட்டன் எனும் பிரியந்த நோர்ட்டன் செனவிரத்ன என்பவர் ஈட்டாளராகவும் வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.*

*இவ்வாதனம் 2014, சனவரி 16 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.*** - *2013.09.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2013.11.11 ஆந் திகதிய "டெயிலி மிரர்", "லக்பிம", மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

***கொடுப்பனவு முறை.*** - *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ஏலவிற்பனை யாளரிடம் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்.*

(1) கொள்முதல் விலையில் 10வீதம் (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) விற்பனை வரி ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2 வீதம் (நூற்றுக்கு இரண்டரை) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதலில் மிகுதி 90 வீதம் இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்பட விருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- சிரேஷ்ட முகாமையாளர், (கடன் அறவிடுதல்), ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661835, 011-2661836, 011-2661826.

ஐ. டப்ளியூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏல விற்பனையாளர்.

இல. 369/1, துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை, மாவில்மட,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2210595, 071-4755974, 071-8448374, 077-7761706.

12-1137

---

**டீஎப்சீசீ வங்கி**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***8607 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

***மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்ட முனே, வாத்துவ வஸ்கடுவ தெபத்தே, பொத்துபிட்டியில் அமைந்துள்ள மாவத்தபொட, கொஸ்கஹவத்த என அழைக்கப்படும் அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் யூ. எம். டி. சில்வா அவர்களால் வரையப்பட்ட 1987 ஆம் ஆண்டு மே மாதம் 6 மற்றும் 24 ஆந் திகதிகளிடப்பட்ட 3293 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் ஏ மற்றும் பி, துண்டு சீ, துண்டு டீ மற்றும் துண்டு 1ஏ இல் அடுத்தடுத்து அமைந்துள்ள மண், மரங்கள், தோட்டங்கள் மற்றும் கட்டிடங்கள் அனைத்தும் உள்ளடங்கிய துண்டுகளான கே மற்றும் எல் எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகள் - மேலே கூறப்பட்ட பொத்துபிட்டியவில் அமைந்துள்ள மாவத்தபொட கொஸ்கஹவத்த காணியின் துண்டு 1ஏ இல் துண்டு எம் (8 அடி அகலமான பாதைக்கான ஒதுக்கீடு) எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டை நடைபாதையாகவும் வாகனப் போக்குவரத்திற்கும் பயன்படுத்தும் உரிமையுடன் நியூ கோல்ட் ஸ்டார் சோமில் (தனியார்) நிறுவனத்திற்குச் சொந்தமான இயந்திர உபகரணங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கலாக***

***(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 25.66பே., 0ஏ. 0றூ. 15.00பே., 0ஏ. 0றூ. 20பே. மற்றும் 0ஏ. 0றூ. 24பே.) (முறையே)***

*(களுத்துறை பிரசித்த நொத்தாரிசு டீ. ஏ. புஞ்சிஹேவா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆந் திகதியிடப்பட்ட 8607 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் கூட்டிணைந்த இல. பீவீ 60080 எனப் பதிவுசெய்யப்பட்ட வாத்துவயில் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட நியூ கோல்ட் ஸ்டார் சோமில் (தனியார்) நிறுவனம் (இதன் பின்னர் கம்பனி என அழைக்கப்படும்) நிறுவனத்தினால் டீஎப்சீசீ வங்கிக்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து)*

டீஎப்சீசீ வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 16 ஆந் திகதி வியாழக்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு ரூ. 74,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூ. 500 ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூ. 2,000.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வங்கியின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/ இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
122 வருடகால சேவை அனுபவம்.

| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும் காட்சியறையும் :* |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

12-1108

**சம்பத் வங்கி பீ எல் சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

**சொத்துக்கள், நிலமனை ஏலவிற்பனை**

எஸ். ஆர். யாப்பா - கணக்கு இல. 1103 5563 9372

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2012, நவெம்பர் 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2013.12.13 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் 2013.11.13 ஆந் திகதிய ''திவயின'', ''ஐலன்ட்'', ''தினக்குரல்'' தினசரி பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான, குறிப்பிடப்பட்ட ஐம்பத்தொரு இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து அறுநூற்றுமுப்பத்தெட்டு ரூபா இருபத்தாறு சதம் (ரூ. 51,62,638.26) 2012, ஒற்றோபர் 10 ஆந் திகதி முதல் அறவிடப்படவேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தி தீர்க்கும் திகதி வரை நாற்பத்தெட்டு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து பதினாறு ரூபா எண்பத்துமூன்று சதம் (ரூ. 48,88,016.83) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு வீதம் (16%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப் பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள இங்கு அட்டணையில் நேர்த்தியாக விபரிக்கப் பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரரான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர் மூலமாக 2014.01.17 ஆந் திகதி மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், மெத கோரளேயின் ஹெலபல்ல பத்வின் வெலிகேபொல பிரதேச சபை எல்லைக்குள், ஹுனுவெல - வடக்கு கிராமத்தில் அமைந்த ''கலேவத்த'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஈ. ரீ. பீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2009, திசெம்பர் 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 3456 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு: அதே காணியின் ஒரு பகுதி; கிழக்கிற்கு : அதே காணியின் ஒரு பகுதி ; தெற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். தியமக என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 2723 எனும் வரைபடத்தில் 4 மற்றும் அதே காணியின் ஒரு பகுதி மற்றும் ; மேற்கிற்கு : அதே காணியின் ஒரு பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தைந்து தசம் இரண்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 35.2பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள் ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள், மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 3456 எனும் வரைபடத்திற்கு அமைவாக இரத்தினபுரி காணிப்திவகத்தில் பரிமாணம்/பக்கம் E167/288 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். எஸ். தியகம என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992, திசெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 2723 எனும் வரைபடத்தின் லொட் இலக்கங்கள் 1 மற்றும் 4.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

12-1182

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.